DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.19/2021**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜா | Caste: | |
| Father's/Husband Name: | சடையன் | Calling: | ஜேசிபி டிரைவர் |
| Village: | தண்ணிலாபாடி | Religion: | |
| Taluk: | நாகப்பட்டினம் மாவட்டம் | Age: | 41 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.03.2026

( 1,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் நாகப்பட்டினம் மாவட்டம் தண்ணிலாபாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஜேசிபி டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா பார்த்திபனூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட சூடியூர் கிராமத்தில் ஜெயப்பிரகாசம் என்பவரிடம் வேலை பார்த்தேன். அவர் கிராவல் மண் எடுத்து விற்பனை செய்யும் தொழில் செய்து வந்தார். அ.சா.1 சாத்தனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. சாட்சிகள் சுந்தரபாண்டியன், செல்வம் ஆகியோர்களை தெரியாது. அ.சா.1 கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் அதுசம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:28:44 +0530

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 04.03.2021ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் ஜெயபிரகாசத்துக்கு சொந்தமான மண் குவாரியில் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றும் அப்போது TN 65 AJ 0786 என்ற எண்ணுள்ள சிவப்பு நிறமுள்ள Swift காரில் 1ம் எதிரி துரைப்பாண்டியன் 3ம் எதிரி ஜோதி ரங்கநாயகி ஆகியோர்கள் வந்தார்கள் என்றும் அதனை தொடர்ந்து TN 65 5655 சிவப்பு நிற M80 Scooter-ல் வந்தார் என்றும் அப்போது குவாரியில் வாட்ச்மேனாக வேலை பார்த்த சாத்தனை பார்த்து எங்கடா உன் முதலாளி என்று கேட்டு சாத்தனை பார்த்து சாதியை சொல்லி திட்டி கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள் என்றும் 2ம் எதிரி இவனை அடித்து கொன்றால்தான் மத்தவனுக்கு பயம் வரும் என்று சொல்லவும் 2ம் எதிரி தான் அணிந்திருந்த செருப்பை கழற்றி சாத்தனை அடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும் அப்போது நான் சுந்தரபாண்டியன், செல்வம் ஆகியோர் சத்தம் போட்டு விலக்கிவிட்டோம் என்றும் பின்பு சாத்தன் 07.03.2021ம் தேதி பரமக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார் என்றும் அங்கு சிகிச்சையில் இருந்தபோது பார்த்திபனூர் காவல்நிலைய ஆய்வாளர் வந்து விசாரிக்க சாத்தன் புகார் மனு கொடுத்தார் என்பது தெரியும் என்றும் அதன்பேரில் வழக்கு பதிவு செய்து பரமக்குடி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் 07.03.2021ம் தேதி விசாரித்தபோது கூறிவிட்டு தற்போது புகார்தாரரை தெரியாது என்றும், வழக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றும்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:28:48 +0530

டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை என்றும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:28:53 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
## Spl.Sessions Case No.19/2021

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜெயபிரகாஷ் | Caste: | |
| Father's/Husband Name: | பெரியமருதுபாண்டியன் | Calling: | செங்கல் காளவாசல் |
| Village: | சூடியூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 67 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.03.2026

( 1,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355–ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா பார்த்திபனூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட சூடியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். செங்கல் காளவாசல் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 சாத்தனை தெரியும். அவர் என் மருமகன் வினோத்குமார் நடத்திவந்த கிராவல் குவாரியில் வாட்ச்மேனாக வேலை பார்த்தார். ஆஜர் எதிரிகளை தெரியும். 3ம் எதிரியையும் தெரியும். அ.சா.2 மற்றும் சாட்சி வினோத்குமாரை தெரியும். வினோத்குமார் என் மருமகன். அ.சா.4 ராஜா எனக்கு சொந்தமான ஹிட்டாச்சி ஆப்ரேட்டராக வேலை பார்த்தார். அ.சா.1 சாத்தன் இந்து பள்ளன் வகுப்பை சேர்ந்தவர். எதிரிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த அகமுடையர் சமூகத்தை சேர்ந்தவர்கள். கடந்த 04.03.2021ம் தேதி காலை 11.30மணியளவில் TN 65 AJ 0786 என்ற Swift காரில் 1ம் எதிரியும் அவரது மனைவியும், TN 65 5655 என்ற M80

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:28:58 +0530

வாகனத்தில் 2ம் எதிரி மணிமாறனும் எங்கள் குவாரிக்கு வந்துள்ளார்கள். அவர்கள் உன் முதலாளி எங்கே என்று ஹிட்டாச்சி ஆப்ரேட்டர் ராஜாவிடம் கேட்டுள்ளார்கள். முதலாளி இல்லை என்று ராஜா கூறியுள்ளார். சாத்தன் எதற்காக முதலாளியை கேட்கிறீர்கள் என்று கேட்டபோது நத்தைபிடிச்சு திங்கிற ஈனச்சாதி பள்ளப்பயலே உனக்கு என்னடா சொல்லனும் உன்னை அடிச்சு கொன்றான்தான்டா சரியா வரும் எனக் கூறி மூன்று எதிரிகளும் செருப்பால் சாத்தனை அடித்துள்ளார்கள். சாத்தன் மயக்கம் அடையவும் சுந்தரபாண்டியன் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக ஹிட்டாச்சி ஆப்ரேட்டர் ராஜா எனக்கு தகவல் சொன்னான். மேலும் அந்த சம்பவத்தை வீடியோ எடுத்திருப்பதாகவும் ராஜழ சொன்னான். நான் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு மதியம் 3.00 மணியளவில் சென்று பார்த்தேன். அ.சா.1 சாத்தனிடம் 07.03.2021ம் தேதி புகார் வாங்கிவிட்டு என்னை 09.03.2021ம் தேதி டிஎஸ்பி இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

என் மருமகன் வினோத்குமார் கிராவல் குவாரி நடத்தி வந்த நிலம் யாருக்கு கிரையமானது என்றால் அவருடைய கிரைய சொத்து. அவருக்கு கிரையம் எழுதிக்கொடுத்தது யார் என்றால் நான்தான். அந்த சொத்து நான் கிரையம் பெற்ற சொத்தா அல்லது பூர்வீக சொத்தா என்றால் கிரைய சொத்து. கிரையம் வாங்கியவுடன் நான்தான் முதன்முதலில் அந்த சொத்தில் கிராவல் குவாரி நடத்தினேன் என்றால் இல்லை. வேறு சொத்தில் குவாரி நடத்தினேன். நான் நடத்தி வந்த குவாரிக்கு பக்கத்தில் 1ம் எதிரி துரைப்பாண்டியனுக்கும் குவாரி இருந்தது என்றால் தெரியாது. நான் வினோத்குமாருக்கு கிரையம் கொடுத்த நிலத்தில் அவர் இந்த

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:29:02 +0530

வழக்கு சம்பவம் நடைபெற்ற காலத்தில் குவாரி நடத்தினார் என்றால் சரிதான். என் மருமகன் வினோத்குமார் குவாரி நடத்தி வந்த இடத்திற்கு அருகில் 1ம் எதிரி துரைப்பாண்டியனுக்கு குவாரி இருந்தது என்றால் வழக்கு சம்பவம் நடைபெற்ற சமயத்தில் இல்லை. ஆனால் நிலம் இருந்தது என்றால் தவமணி என்பவர் பெயரில் இருந்தது. தவமணி 1ம் எதிரியின் மாமனார். தவமணிக்கு சொந்தமான இடத்தில் 1ம் எதிரி துரைப்பாண்டி குவாரி நடத்தினாரா என்றால் தவமணிதான் நடத்தினார், துரைப்பாண்டியன் வந்துசெல்வார். 1ம் எதிரியின் பொறுப்பில் குவாரி இருந்தது என்றால் சரிதான். என் மருமகன் வினோத்குமார் குவாரி நடத்துவதற்கு உரிமம் பெற்றிருந்தாரா என்றால் பெற்றிருந்தார். வினோத்குமார் பெயரில் நான்தான் பினாமியாக குவாரி நடத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. வினோத்குமார் குவாரிக்கு பக்கத்தில் துரைப்பாண்டியன் குவாரி நடத்தினார் என்று சொன்னால் சரியல்ல. குவாரி நடத்தும் தொழில் சம்பந்தமாக எனக்கும் 1ம் எதிரி துரைப்பாண்டியனுக்கும் நேரடியாக முன் விரோதம் இருந்தது என்றால் இல்லை. நான் தற்போது பரமக்குடியில் குடியிருந்து வருகிறேன். என் தந்தை உயிருடன் உள்ளார். அவர் 1ம் எதிரியுடன் இருந்து வருகிறார் என்றால் இல்லை, என் தங்கையுடன் இருந்து வருகிறார். நான் தகப்பனாருடன் நிலம் சம்பந்தமாக பிரச்சனை செய்து வந்தேன் என்றால் இல்லை. அவ்வாறு நான் சொத்து சம்பந்தமாக பிரச்சனை செய்ததால் என் தகப்பனார் தினசரி நாளிதழில் நான் அவருக்கு மகன் இல்லை என்றும் அவர் இறந்தால் நான் அவருக்கு இறுதிச்சடங்கு செய்யக்கூடாது என்று விளம்பரம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் மகன் கற்பூர சுந்தரபாண்டியன் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:29:07 +0530

நடைபெற்றதாக சொல்லப்படும் காலகட்டத்தில் என் மகன் வழக்கறிஞராக இருந்தார் என்றால் சரிதான். சாத்தன் என் மருமகன் நடத்தி வந்த குவாரியில் எத்தனை வருடமாக காவலாளியாக வேலை பார்த்து வந்தார் என்றால் ஒரு வருடம். என்னிடமும் சாத்தன் வேலை பார்த்தார் என்றால் சரிதான். சாத்தன் என்னிடம் என்ன வேலை பார்த்தார் என்றால் வீட்டில் வாட்ச்மேனாகவும், விவசாயத்திற்கு உதவியாகவும் இருந்தார். ஏற்கனவே 1ம் எதிரி துரைப்பாண்டியன் பார்த்திபனூர் காவல்நிலையத்தில் என் மீதும் சாத்தன் மீதும் ஒரு புகார் கொடுத்து அந்த புகாரின் அடிப்படையில் கு.எண்.202/2016 என வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் குற்ற இறுதி தாக்கல் செய்யப்பட்டு CC.No. 436/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 1ம் எதிரி, சாத்தன் 2ம் எதிரி என்றால் சரிதான். நானும் ஒரு Counter வழக்கு கொடுத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை என் மீதும் சாத்தன் மீதும் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை **எ.சா.ஆ.1** . என் மீதும் சாத்தன் மற்றும் ஜெயசங்கர் ஆகிய மூவர் மீதும் 1ம் எதிரி துரைப்பாண்டியன் பார்த்திபனூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் கு.எண்.89/2017 என பதிவு செய்யப்பட்டு பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC. 538/2019 என நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை கு.எண்.89/2017 க்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை நகல் **எ.சா.ஆ.2**. அந்த புகாருக்கும் நான் ஒரு Counter case கொடுத்துள்ளேன். 1ம் எதிரி துரைப்பாண்டியன் என் மீதும்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:29:11 +0530

சாத்தன் மற்றும் ஜெயசங்கர் மீது புகார் கொடுத்ததால் முன்விரோதம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. ராஜா என்ற நபர் என்னிடமும் என் மருமகன் வினோத்குமாரிடமும் ஹிட்டாச்சி ஆப்ரேட்டராக வேலை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சாத்தன் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாத்தன் எத்தனை நாட்கள் கழித்து தாக்கப்பட்ட விவரத்தை எனக்கு தெரிவித்தார் என்றால் அன்றே தெரிவித்தார். அவரை மருத்துவமனையில் சேர்த்தது நான்தான் என்றால் இல்லை. சுந்தரபாண்டியன். நான் சொன்னதுபோல் எந்தவொரு சம்பவத்தையும் சாத்தன் சொல்லி நான் கேள்விப்படவில்லை என்றால் சரியல்ல. 1,3 எதிரிகளுக்கும் அவர்களது உறவினரான 2ம் எதிரிக்கும் எனக்கும் இடையில் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு பலமான பிரிவுகளின் கீழ் எதிரிகள் மீது வழக்கு தொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில வழக்கறிஞராக இருக்கும் என் மகனை வைத்து அவரது ஆலோசனையின்பேரில் சாத்தன் மூலம் இந்த பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதுவும் நடக்கவில்லை என்றும் முன்விரோதத்தை மனதில் வைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:29:16 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)